1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.-யிலே பயிற்சி பெறுகின்றவர்கள் நல்ல தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களாக வரவேண்டும் என்கின்ற நோக்கத்துடன் தான் இந்த திட்டத்தை அரசு அமல்படுத்திக்கொண்டிருக்கிறது. அதிலே தேர்ச்சிபெற்ற அத்தனை பேர்களுக்கும் அரசுத் துறையிலேயே வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது முடியாத ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது 75 சதவிகிதம் பேர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுமா என்று கேட்கிறார்கள். இதே உறுப்பினர் அவர்கள் நாளையதினம் கேட்கிறபோது, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே இருந்தவர்கள், அவர்களை ஓவர்லுக் செய்து நீங்கள் இவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதா என்று பல உறுப்பினர்கள் கேட்கக்கூடும். ஆகவே, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து அவர்கள் வருகின்றபோது, அந்த சான்று இருக்குமானால்தான் அவர்களுக்கு, ஐ.ஆர்.டி. -யிலே பயிற்சி பெற்றவர்களுக்கும் முன் உரிமை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமே தவிர, இதுபோன்ற திட்டத்தை அரசு ஏற்காது.

(ஆ) திருச்சி-குளத்தூர் கே-1 நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. குழந்தைவேலு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி-குளத்தூர் கே-1, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்த'' மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

குளத்தூர், திருச்சி-புதுக்கோட்டை பிரதான சாலையில் அமைந்துள்ளது. புதுக்கோட்டையிலிருந்து கீரனூருக்கு குளத்தூர் வழியாக 14 நகரப் பேருந்துகள் 84 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் புதுக்கோட்டையிலிருந்து குளத்தூர், கீரனூர் வழியாக திருச்சிக்கு புறநகர் பேருந்துகள் 177 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1992 ஏப்ரல் 10

திருச்சியிலிருந்து கீரனூர் வழியாக குளத்தூர் அவுட்டர் வரை இரண்டு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. திருச்சியிலிருந்து குளத்தூருக்கு நேரடிப் பயணிகள் 10 விழுக்காடு கூட கிடையாது. எனவே 5—12—1989 முதல் மேற்கூறிய இரண்டு பேருந்துகளும் திருச்சி முதல் கீரனூர் வரை இயக்கப்பட்டு வருகின்றன. கீரனூரிலிருந்து குளத்தூர் அவுட்டர் 1.4 கிலோமீட்டர் தூரமே ஆகும்.

இப்பேருந்துகள் நிறுத்தப்பட்டது குறித்தும் வேறு கோரிக்கைகள் சம்பந்தமாகவும் 26—3—1992 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட பேருந்து மறியல் போராட்டம் குறித்து 24—3—1992 அன்று குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் அனைத்துபுற நகரப் பேருந்துகளையும் குளத்தூரில் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல ஓட்டுநர் நடத்துநர்களுக்கு அறிவுறுத்த தீர்மானிக்கப்பட்டது. மேலும் கே. 1 நகரப் பேருந்தை மீண்டும் இயக்க மறுபரிசீலனை செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இது குறித்து மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலிருந்து கீரனூருக்கு குளத்தூர் வழியாக திருவள்ளுவர் பேருந்துகள் 177 தடவைகள் செல்வதாக கூறியுள்ளார்கள். திருவள்ளுவர் பேருந்துகள் குளத்தூரில் ஒன்று கூட நிற்பது இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குளத்தூரைச் சுற்றி சுமார் 60 கிராமங்கள் உள்ளன. அந்த கிராமங்களில் இருந்து பள்ளிக்கு செல்லும் மாணவர்களும் தொழிலாளர்களும் ஏராளமானவர் இந்த கே. 1 பஸ் மூலமாகத்தான் பயன்பெற்று வருகின்றார்கள். இந்த கே. 1 பஸ் நின்றதன் மூலமாக அவர்கள் உரிய நேரத்தில் பள்ளிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. திருச்சியிலிருந்து கீரனூர் பஸ்கள் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரண்டு பஸ்களையாவது மீண்டும் குளத்தூர் வழியாக நீடித்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டினுடைய வரலாற்றில் தமிழகத்தினுடைய போக்குவரத்துத் துறைதான் இன்றைக்குப் பல்வேறு மாற்றங்களை உருவாக்குவதற்கு நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அறிவுரை வழங்கி அதை நாம் ஏற்று நடத்திக்கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

குறிப்பாக, இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியும், முதல்வர் அவர்களோ, அமைச்சர் பெருமக்களோ கலந்து கொண்டு உள்ள நிகழ்ச்சிகளில் நாளைய மறுதினத்திலே பேருந்து வேண்டுமென்று சொன்னால், இந்திய நாட்டினுடைய வரலாற்றில் தமிழ்நாட்டில் தான் அந்த பேருந்து இயங்க முடிகின்ற சரித்திரத்தை மாற்றி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது கே. 1 பேருந்து இயக்கப்பட வேண்டும் என்று கேட்டு இருக்கின்றார்கள். குளத்தூர் வரையிலே இயக்கப்படுகின்ற அந்த பேருந்தில் 10 சதவிகிதம் கூட மக்கள் வரவில்லை. ஆகவே, அது நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி—கீரனூர் வரையிலே இயக்கப்படுகின்ற பேருந்தை நீடித்துத் தர முடியுமா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாளைய மறுதினத்திலே அதை நீட்டித்துத் தருவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அரசு மேற்கொள்ளும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி இந்த கே.1 பஸ்—ஐ திருச்சி—கீரனூர் செல்லும் பஸ்—ஐ மீண்டும் குளத்தூர் வரையில் விரைவில் இயக்க ஏற்பாடு செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

2. சிறப்புக் குறிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவைத் தலைவர் அனுமதி மறுத்த பிரச்சினை.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் முறையில்லாமல் இப்படி நாள்தோறும் நடக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இது முறையல்ல. என்னுடைய அனுமதியை உங்களுக்கு வழங்கவில்லை. உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்புவது வேறு, நீங்கள் விரும்பிய நேரத்தில் எல்லாம் இப்படி நிற்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் உங்களுக்கு என்னுடைய அறையிலேயே அனுமதி வழங்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நான் அனுமதி வழங்காததை நீங்கள் எப்படி இங்கே வந்து சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.